DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, DENKANIKOTTAI
PROSECUTION WITNESS

SC. No. 71/2023 Crime No. 523/2020 Station Thally PS

| | | | |
|---|---|---|---|
| Name | Lw15 /Pw 6 / டாக்டர் திருநாவுகரசு | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | |

**28.02.2025.**

**எதிரிகள் ஆஜர் .**

**முதல் விசாரணை**

சத்தியமாக சொல்கிறேன்.

நான் தற்போது மதுரை ராஜாஜி மருத்துவமனையில் எலும்பு மற்றும் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை முதுநிலை படிப்பு மூன்றாம் ஆண்டு படித்து வருகிறேன்.

நான் கடந்த 28.08.2020ம் ஆண்டு தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக இருநத் போது என்னிடம் இரவு சுமார் 10.20 அளவில் வயிற்றில் அடிப்பட்டதாக கூறி ரூத்ரப்பா சிகிச்சைக்கா வந்தார்.

நான் அவரை விசாரித்து போது அவரை யாரோ அடையாளம் தெரியாத நபர் துப்பாக்கியால் சுட்டுவிட்டதாக கூறினார்.

நான் அவரை பரிசோதனை செய்து பார்த்த போது அவரது வலதுபுற வயிற்றில் கீழ பக்கத்தில் சிதைந்த குண்டு அடி காயம் காணப்பட்டது.

மேலும் அவரது நெஞ்சில் பகுதியில் இரத்தம் காயம் இருந்தது.

நான் அவருக்கு முதலுதவி சிகிச்சை மட்டும் செய்து, அவரை மேல் சிகிச்சைக்கா கிருஷ்ணகிரி மருத்துவனைக்கு அனுப்பி வைத்தேன்.

அவர் நான் அனுப்பிய வைத்த மருத்துவமனைக்கு செல்லாமல், ஒசூரில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு சென்று அறுவை சிகிச்சை எடுத்தார் கொண்டார் என்றும், இந்த வழக்கில் புலன் விசாரணை அதிகாரி காயச் சான்று வாங்க எடுத்து வந்த ஆவணத்தின் மூலம் தெரிந்து கொண்டேன்.

அவர் எடுத்த வந்த ஆவணத்தின் அடிப்படையில் நான் அவருக்கு ருத்ரப்பாவுக்கு காயச்சான்றிதழ் வழங்கினேன்.

அவருக்கு இரண்டு காயம் ஏற்பட்டது.

அதில் அவர் வயிற்று பகுதி ஏற்பட்ட குண்டு அடி காயம் அவரது சிறுஉடல் கிழிந்த இருந்த காரணத்தினால் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன்.

நெஞ்சில் ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று தான் சான்று வழங்கினேன்.

போலீசார் என்னை விசாரித்தார்கள்.

இந்த சாட்சி மூலமாக விபத்து பதிவேடு அ.த.சா.ஆ 8 ஆகும்.

காயச்சான்றுதல் அ.த.சாஆ,. 9 ஆகும். குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் என்னிடம் தூர்ப்பாவை சுடப்பயபன்படுத்திய துப்பாக்கியை காட்டி விசாரித்தார்களா என்றால் இல்லை.

எதை வைத்து அவர் வயிற்றில் ஏற்பட்ட காயம் துப்பாக்கியால் சுட்டதால், ஏற்பட்டது என்று கூறியுள்ளார்கள் என்று சொன்னால் நான் எனது காய்சசான்றிதழ் துப்பாக்கியால் ஏற்பட்ட காயம் என்று குறிப்பிட்டு கூறவில்லை.

ஆனால் அவர் குடல் கிழிந்த இருந்ததாலும், அவருக்கு ஒரு பெரிய அறுவை சிகிச்சை செய்து, அவரது உடல் மீண்டும் தெய்க்கப்பட்டதால் அது கொடுய காயம் என்று சான்று அளித்தேன்.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது.**

**ஓம்./—திரு.ஆர்.ஹரிஹரன்.,எம்.எல்.,**
**சார்பு நீதிபதி,**
**தேன்கனிக்கோட்டை.**